### அலகு 12 : கணக்கீட்டு வழுக்களைத் திருத்துதல்

வணிகம் தொடர்பாக அக்கறை செலுத்தும் பிரிவினருக்கு **தீர்மானங்களை** மேற்கொள்வதற்கு சரியான தகவல்களை வழங்கி நிதி அறிக்கைகளை தயாரிப்பதற்கு முன்னர் கணக்கேடுகளிலுள்ள வழுக்கல் திருத்தப்படல் வேண்டும்.

**பயிற்சி 1**

பின்வரும் வழுக்கள் எச்சந்தர்ப்பத்தில் ஏற்படக்கூடிய வழுக்கள் **என** குறிப்பிடுக.

1) கொள்வனவுக் கணக்கின் கூட்டுத்தொகை ரூபா 3000 இனை அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.
2) தொலைபேசிக் கட்டணம் ரூபா 5000 பரீட்சை மீதிக்குக் கொண்டு செல்லப்படவில்லை.
3) ராஜாவிற்கு விற்பனை செய்த ரூபா 50,000 விற்பனை நாளேட்டில் ரூபா 5000 என பதியப்பட்டிருந்தது.
4) கமலனின் கணக்கு ரூபா 1500 இனால் குறைவாக கூட்டப்பட்டுள்ளது.
5) விற்பனை நாளேட்டின் கூட்டுத் தொகையான ரூ 48,000 விற்பனைக் கணக்கிற்குக் கொண்டு செல்லப்படவில்லை.
6) வாடகைக் கணக்கு ரூபா 2000 இனால் குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
7) சம்பளக் கணக்கின் மீதி ரூபா 12,500 பரீட்சை மீதியில் ரூபா 1250 என பதியப்பட்டிருந்தது.
8) மோட்டார் வாகனக் கொள்வனவு ரூ. 200,000 பொது நாட்குறிப்பேட்டில் பதியப்படவில்லை.
9) மின்சாரக் கட்டணக் கணக்கு ரூபா 10,000 இனால் அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.
10) காணிக் கொள்வனவு ரூபா 400,000 பரீட்சை மீதியில் ரூபா 40,000 என பதியப்பட்டிருந்தது.

**பயிற்சி 2**

இடைவெளி நிரப்புக.

1) .................................................................... தத்துவத்திற்கமைய வணிக கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படும்.

2) ஒவ்வோர் வரவு பதிவிற்கும் .............................................. பதிவு காணப்படும்.

3) ............................................. கூட்டுத்தொகை சமமாக அமைய வேண்டும்.

4) கணக்கீட்டு வழுக்கள் 1) ................................................................

2) ........................................................................................ வழுக்களாகும்.